ஆணையர் (வணிகவரி)
19 JAN 2021
எழிலகம், சென்னை-600 005

Service Return

சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வணிகவரித்துறை – சேலம் கோட்டம் – செல்வி தே. ரூபா என்பவர் கருணையடிப்படையில் 28.11.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை

அரசாணை (ப) எண். 3

நாள்:04.01.2021
சார்வரி , மார்கழி–20,
திருவள்ளுவர் ஆண்டு, 2051

படிக்கப்பட்டன:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
2. இணை ஆணையர் (வணிகவரி), சேலம் கோட்டம் அவர்களின் செயல்முறைகள் எண்.15384/2018/அ2, நாள் 20.11.2018.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
4. கூடுதல் ஆணையர் (நிர்வாகம்), வணிகவரி ஆணையர் அலுவலகம், கடிதம் எண்.ஒய்3/681911/2020, நாள் 12.10.2020.

*****

ஆணை:

வணிகவரித் துறையில், சேலம் கோட்டம், உதவி ஆணையர் (வணிகவரி) (செயலாக்கம்) அலுவலகம், நாமக்கல் சரகத்தில் ஓட்டுநராகப் பணிபுரிந்த போது 27.06.2016 அன்று மறைந்த திரு மா.தேவேந்திரன் என்பவரின் மனைவி திருமதி தே.கவிதா என்பவர் தனது மகள் செல்வி தே. ரூபா என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 19.12.2016 அன்று விண்ணப்பித்துள்ளார். செல்வி தே. ரூபா, இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) மார்ச் 2010–ல் தேர்ச்சி பெற்றுள்ளார். நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி, தனியர் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறத் தகுதியுடையவராக அறியப்பட்டு, மேற்படி விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட சேலம் கோட்டம் இணை ஆணையர் (வணிகவரி) அவர்களின் செயல்முறைகளின்படி வணிகவரித் துறையின் உதவி ஆணையர் (வணிகவரி), அன்னதானப்பட்டி சரகம், சேலம் அலுவலகத்திற்கு தனியர் ஒதுக்கீடு செய்யப்பட்டு 28.11.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணிபுரிந்து வருகிறார். கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட செல்வி தே. ரூபா என்பவருக்கு, அவர் இளநிலை உதவியாளராகப் பணியேற்ற நாளான 28.11.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்ய மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கூடுதல் ஆணையர் (நிர்வாகம்), வணிகவரி ஆணையர் அலுவலகம் அவர்கள் அரசுக்குப் பரிந்துரைத்துள்ளார்.

2. மேற்காணும் கூடுதல் ஆணையரின் கருத்துருவைப் பரிசீலித்ததில், செல்வி தே.ரூபா. கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்வதற்குத் தேவையான வயது

மற்றும் குறைந்தபட்ச கல்வித்தகுதியான, அதாவது, இடைநிலைக்கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், மேலும், தனியரின் பணிவரன்முறை தொடர்பான அனைத்து ஆவணங்கள் / சான்றுகள் சரிபார்க்கப்பட்டதில், பார்வை 3–ல் படிக்கப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறையால் வெளியிடப்பட்ட அரசாணையில் நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் தனியர் பூர்த்தி செய்துள்ளார்.

3. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

4. எனவே, வணிகவரித் துறையில் சேலம் கோட்டம், உதவி ஆணையர் (வணிகவரி)(செயலாக்கம்) அலுவலகம், நாமக்கல் சரகத்தில் ஓட்டுநராகப் பணிபுரிந்த போது 27.06.2016 அன்று மறைந்த திரு மா.தேவேந்திரன் என்பவரின் மகள் செல்வி தே. ரூபா என்பவருக்கு, தமிழ்நாடு அமைச்சுப் பணியில், வணிகவரித் துறையில், உதவி ஆணையர் (வணிகவரி). அன்னதானப்பட்டி சரகம், சேலம் அலுவலகத்தில், அவர் பணியில் சேர்ந்த நாளான 28.11.2018 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணி வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு பணி வரன்முறைப் படுத்தப்படுவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் நிலுவைத் தொகை ஆகியவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.எண்.21219/ட்டி–1/ 2020, நாள் 24.12.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறையின் அ.சா.எண்.35656/ஜி1/2020–1, நாள் 29.12.2020 ஆகியவற்றில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பீலா ராஜேஷ்
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்:</u>
செல்வி தே. ரூபா, இளநிலை உதவியாளர்,
உதவி ஆணையர் (வணிகவரி), அன்னதானப்பட்டி சரகம்,
சேலம் கோட்டம்,
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை–5 வழியாக).
முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை–5.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை–5 வழியாக)
<u>நகல்;</u>
இணை ஆணையர் (வணிகவரி), சேலம் கோட்டம்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை–5 வழியாக).
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, சென்னை – 9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ட்டி–1) துறை, சென்னை – 9.
இருப்புக்கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

(ஆ.கரிகாலன்)
அரசு சார்புச் செயலாளர்

True Copy; Attested;
23/11/21

உதவி ஆணையர் (மா.வ)
அன்னதானப்பட்டி சரகம், சேலம்.